# காசநோய் என்பது என்ன?



காசநோய் (டிபி), ***மைக்கோபாக்டீரியம் டூபர்குளோசிஸ்*** என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது. காசநோயில் 2 வகைகள் உள்ளன.

## செயல்நிலை காசநோய்

**காசநோய்**, தொற்று உள்ள ஒருவர் மற்றவர்களுக்கு நோயைப் பரப்பலாம். அந்த நபருக்கு நோயின் அறிகுறிகள் இருக்கலாம்



## மறைந்துள்ள தொற்று காசநோய்

மறைந்திருக்கும் காசநோய் கொண்டிருப்பவர் **தொற்றை மற்றவர்களுக்குப் பரப்பக்கூடியவர் அல்ல**, அந்த நபருக்கு நோயின் அறிகுறிகள் இருக்காது



National Centre for Infectious Diseases

# காசநோய் (டிபி), எவ்வாறு பரவுகிறது?



காசநோய் தொற்று பொதுவாக மற்றவர்களுக்குக், காசநோய் தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிய மற்றும் நீண்ட நேர தொடர்பு கொள்வதன்மூலம் பரவுகிறது. எடுத்துக்காட்டாக, குளிரூட்டப்பட்ட அல்லது காற்றோட்டம் இல்லாத இடத்தில் நீண்ட நேரத்திற்கு ஒன்றாக இருக்கும்போது பரவுகிறது*.

*நீண்ட நேரம்: ஒட்டுமொத்தமாக 8 மணிநேரம் அல்லது அதற்கு மேல்

## காசநோய் பின்வருனவற்றின்மூலம் பரவலாம்...



ஒரே வீட்டில் வசிப்பது



காற்றோட்டம் இல்லாத ஒரே அறையில் நீண்ட நேரம் பகிர்ந்துகொள்வது

## காசநோய் பின்வருனவற்றின்மூலம் பரவாது...



ஒருவரின் கையைக் குலுக்குவது



உணவு அல்லது பானத்தைப் பகிர்ந்துகொள்வது



படுக்கைத் துணிகள் அல்லது கழிப்பறை இருக்கைகளைத் தொடுவது

National Centre for Infectious Diseases

# நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய காசநோய் அறிகுறிகள் யாவை?





இரவில் வியர்த்தல்



இடைவிடாத காய்ச்சல்



2 வாரங்கள் அல்லது அதற்கு மேல் இடைவிடாத இருமல்



சோர்வு



உடல் இழப்பு



நெஞ்சு வலி



தொண்டைச்சளியில் இரத்தம்

National Centre for Infectious Diseases

# உங்களுக்குக் காசநோய் அறிகுறிகள் இருந்தால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?



1. உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், உங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு, கூடிய விரைவில் சிகிச்சை பெறவும்
2. அருகிலுள்ள தனியார் மருத்துவர் அல்லது பலதுறை மருந்தகத்திற்குச் சென்று மருத்துவரை அணுகவும்
3. உங்களுக்குக் காசநோய்க்கான அறிகுறிகள் இருப்பதை மருத்துவரிடம் தெரிவிக்கவும்
4. காசநோய் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டால், மருத்துவர் மேலும் பரிசோதனைகளைச் செய்யலாம் மற்றும்/அல்லது உங்களை மதிப்பீடு செய்ய தேசிய காசநோய் பராமரிப்பு மையத்திற்குப் (NTBCC) போக பரிந்துரைக்கலாம்
5. உங்களுக்குக் காசநோய் (காசநோய் தொற்று அல்லது மறைந்திருக்கும் காசநோய்) உறுதி செய்யப்பட்டால், தகுந்த சிகிச்சை அளிக்கப்படும்



உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உங்கள் ஆரோக்கியத்தையும் உங்களைச் சுற்றியுள்ளவர்களையும் பாதுகாக்கிறது

National Centre for Infectious Diseases